# நேசக்கரங்கள்

NESAKKARANGAL නේසක්කරංගල්

நேசக்கரங்கள் இதழ் 16 ஒக்டோபர் 2021 (ஹிஜ்ரி 1443 ரபியுல் அவ்வல்)





**மக்கள் பணிமனை**

இல-83, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

☎ 0212226349

📞 0777381033


# ஒன்றிணைந்து தேசத்தைக் கட்டியெழுப்புவோம்

முதலில் அன்பையும், நேசத்தையும் காணிக்கையாக செலுத்துகின்றோம். உங்கள் அனைவரின் மீதும் இறைவனது சாந்தியும், சமாதானமும் கிடைக்கப் பெறுக.

“**நேசக்கரங்கள்**” இப்பெயரினை உங்களில் அறிந்தவர்கள் இருப்பர். ஆம் இப்பெயரில் “**மக்கள் பணிமனை**” மூலம் 2012 காலகட்டத்தில் வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பின் “**அகதி**” இதழ்களைத் தொடர்ந்து அது பெயர் மாற்றம் பெற்று **“நேசக்கரங்கள்”** என்ற பெயரில் தேவைக்கு ஏற்ப திங்கள் இதழ்களாக வெளிவந்து கொண்டிருந்தது.

குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர் இவ் இதழின் வருகை தடைபட்டது கவலையான விடயமே. தற்போது அதேபெயருடன்“**நேசக்கரங்கள்**” இணைய இதழாக வெளியிடுவதற்கு தீர்மானித்துள்ளோம்.

“**நேசக்கரங்கள்**”சஞ்சிகையானது நமது இத்தேசத் தில் வாழும் அனைத்து இன, மத, பிரதேச மக்களும் எவ்வித பிரிவினைகளும் வேறுபாடுகளும் இன்றி ஒன்றாக ஓர் அணியாக ஒன்றிணைந்து அழகிய நம் தேசத்தை கட்டியெழுப்புவதே தனது இலட்சியமாகக் கொண்டிருப்பதுடன், இதற்குத் தேவையான ஆக்கங்களையும் கொண்டதாக இருக்கும், மேலும் சமயங்களுக் கிடையில், இனங்களுக்கிடையில், பிரதேசங்களுக்கிடையே உள்ள இடைவெளிகளை குறைப்பதற்காகவும் நல்ல சிறந்த புரிந்துணர்வுகளை ஏற்படுத்துவதற்காகவும் பல்வேறு ஆக்கங்களைக் கொண்டிருக்கும். அத்துடன் தேசத்தைக் கட்டியெழுப்புகின்ற பணியில், சமூகம், கல்வி, பொருளாதாரம், கலை, கலாச்சாரம் பண்பாடு தொடர்பான தேவையான கருத்துக் களையும் முன்வைக்கக் கூடியதாக இருக்கும்.

இவ் “**நேசக்கரங்கள்**” இணைய சஞ்சிகையின் வளர்ச்சியும், இலட்சியத்தில் வெற்றியும் வாசகர்கள் ஆகிய உங்கள் பூரண ஒத்துழைப்பிலேயே இருக்கின்றது. “**நேசக்கரங்களின்**” இலட்சியத்திற்கு ஏற்ப உங்களிடமிருந்தும் ஆக்கங்கள் எதிர்பார்க்கப் படுகின்றது. நிச்சயமாக நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து நம் அழகிய நாடான இலங்கை தேசத்தை சகல வழங்களும் பெற்ற, சகல இனங்களும் ஒன்றுபட்ட ஐக்கிய நாடாக கட்டியெழுப்புவோம்.


Editor: nesakkarangal@gmail.com


# விடுவிக்கப்படாத காணிகளை விடுவிக்க துரிதமான நடவடிக்கை தேவை

இலங்கையின் வடபுல முஸ்லிம் மக்கள் 1990ம் ஆண்டின் பலவந்த வெளியேற்றத்தின் பின்னர், 2009 உள்நாட்டு யுத்த முடிவினையடுத்து தங்களுடைய சொந்த மண்ணில் மீள்குடியேறி தங்களது வர்த்தக, விவசாய, கடற்தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு இயல்பு வாழ்க்கைக்கு வருவதற்கு இன்று வரை முயற்சித்தும் அவர்களினால் முடியாமலேயே இருக்கின்றது.

பல்வேறுபட்ட பிரச்சினைகள் வடமாகாணத்தை தழுவிய நிலையிலும், இம்மக்கள் தற்போது வசித்து வரும் வெளிமாவட்டங்களிலும் இருந்து வருகின்றது. இங்கு குறிப்பாக மன்னார் மாவட்டத்திலுள்ள சிலாவத்துறை மக்கள் எதிர்நோக்கும் காணிப் பிரச்சினையை நோக்கும் பொழுது பாதுகாப்புப் படைகளினால் காணிகள் இன்னும் விடுவிக்கப் படாத நிலையில் இம்மக்கள் தங்களது குடியிருப்பு, விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதவர்களாக இருக்கின்றனர்.


02


நோக்கம் எதுவென்பதை
முதலில் தீர்மானி..
அதுவே இலக்கு என்பதை
உறுதி செய்து கொள்..
கையில் பணமில்லையே..
உடலில் வலுவில்லையே..
உதவி செய்ய நண்பர்கள்
இல்லையே..
என்றெல்லாம் யோசித்து
நேரத்தை வீணாக்காதே..
எதற்கும் பயப்படாதே. தயங்காதே..!
இலக்கை நோக்கி அடியெடுத்துவை..
தொடர்ந்து முன்னேறு. சோதனைகள்
விலகும் பாதை தெளிவாகும்..
நோக்கத்தை அடைந்தே தீருவாய்..

## விடுவிக்கப் படாத காணிகளை...

பக்கம் 01 இன் தொடர்ச்சி சிலாவத்துறை கடற்படை முகாம் அமைந்துள்ள 35 ஏக்கர் காணிகளை விடுவிக்கக்கோரி 109 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் கடந்த காலங்களில் தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் காணிகளை இழந்தவர்களில் 12 குடும்பங்களுக்கு தலா 20 பேர்ச்சஸ் வீதம் அரச காணி வழங்கப்பட்டுள்ளது. அவர்களில் நான்கு குடும்பங்களுக்கு அரசாங்கத்தினால் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வழங்கப்பட்டிருப்பதாகவும் கடற் படை முகாமினை அகற்றும் திட்டம்? கடற்படை பேச்சாளர் ஏற்கனவே தெரிவித்திருப்பதும் இங்கு கவனத்திற் கொள்ளத்தக்கதாகும். இந்நிலையில் முசலிப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட சிலாவத்துறை கிராம மக்களுக்கு சொந்தமான 36 ஏக்கர் காணியில் கடற்படை முகாம் அமைக்கப் பட்டுள்ளமை தொடர்பாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினை பயன்படுத்தி (MU/DS/RTI/2019) சில விடயங்களை பெற்றுக் கொள்ள முடிந்தது. தற்போது 36 ஏக்கர் காணியினை விடுவிக்காமையினால் 223 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக வும் அந்த 223 குடும்பங்களுக்கு காணி உறுதி காணப்படுவதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. 2019ம் ஆண்டு புள்ளிவிபரத் தகவலின்படி 651 குடும்பங்களைச் சேர்ந்த 2354 குடும்ப அங்கத்தவர்கள் வசித்து வருகின்றனர். இதுபோன்ற பல்வேறுபட்ட இடங்களில் மக்களின் உறுதிக் காணிகள் படைத் தரப்பினர்களினால் நிலை கொள்ளப்பட்டுள்ளது. சில காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளது. படைத்தரப்பின ரும் வட மாகாணத்தில் பல்வேறு அபிவிருத்திப் பணிகளையும் பொது மக்களுக்கு செய்து வருவதையும் நாம் ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும்.

அதேவேளை மக்களுடைய பூர்வீக காணிகளில் அமையப் பெற்றுள்ள படை முகாம்களின் காரணமாக சொந்த நிலமின்றி தவிக்கும் மக்கள் மீள்குடியேற முடியாமல் தவிப்பதையும் அவதானிக்க முடிகின்றது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீள்குடியேற்றங்களை துரிதப் படுத்துவதற்கு காணி விடுவிப்புகள் மேற்கொள்ளப்படாமையும் மாற்றுக் காணிகளை மக்கள் விரும்பாமையுமே காரணமாக இருக்கின்றது.

எனவே இவை தொடர்பாக அரசாங்கம் கூடிய கவனம் செலுத்த வேண்டும். மக்களின் காணிகள் மக்களுக்கே வழங்கி வைக்க வேண்டும்.

✸ ✸

# நல்வாழ்விற்குறிய நடைமுறைச் சிந்தனைகள்

# சீரிய வாழ்வு வாழ்வோம்

நாம் இன்றைய சமுதாயத்தில் காண்கின்ற ஒரு விநோதம் என்னவெனில், நம் மூதாதையோர் கூறிவைத்த நல்ல வாழ்வியல் நெறிமுறைகளை நம்புவதாகவும் இல்லை, அதேவேளை நம்பக்கூடிய வகையில் ஏதாவது நவீன நெறிமுறைகளை வகுத்துச் சீரிய வாழ்விற்கு வழிகோலும் நிலையிலும் இல்லை எனும் இரண்டும் அற்ற ஒரு நிலையேயாகும்.

இந்த பிசுபிசித்த சூழ்நிலையினால் மனித வாழ்வு கண்டதே காட்சி, கொண்டதே கோலம் ஆகிவருகின்றது மனித மனதிற்கு என நம் உடலில் ஒரு நிறந்தர இடமில்லை என்பதும், நாக்கிற்கு எலும்பில்லை என்பதும், செயல் ஆற்றும் உடம்பிற்கு இயல்பில்லை என்பதும் இன்று வெளிப்படையாகத் தெரிகின்றது.

மனசாட்சி என்றால் அது என்ன பண்டம்? எங்கே உள்ளது? என்று கேட்போர் தொகை அதிகரித்து வருகின்றது. இவையெல்லாம் எதனைக் காட்டுகின்றது? மனிதன் தனது உயரிய நிலையிலிருந்து கீழிறங்கி வருவதையே சுட்டிக்காட்டுகின்றது எனலாம்.

உண்மை பேசவேண்டும், பிறர் நலனில் சிரத்தை கொள்ள வேண்டும். எல்லோருடனும் அன்பாக இருக்க வேண்டும், இனிய வார்த்தைகளிலேயே உரையாடவேண்டும்.

பிற உயிர்களுக்கு தீங்கு செய்தல் ஆகாது, கொலை, களவு, மது, பிறர் மனதை நயத்தல், பெரியோர் நிந்தை முதலிய மாபாதகங்களைத் தவிர்க்க வேண்டும். உண்ணும் உணவுப் பொருட்களில் கலப்படம் செய்யக் கூடாது. கொள்ளை இலாபமடித்தல், இலஞ்சம் பெறுதல் என்பன பாவச்செயல்கள் போன்ற அறிவுரைகள் இன்றைய நிலையில் சமுதாயத்தில் செல்வாக்குப் பெறுவதாகத் தோன்ற வில்லை. இவை பற்றிய பொதுவான அபிப்பிராயம் என்னவென்றால், இத்தகைய அறச்செயல்கள், தர்மகாரியங்கள் எல்லாம் இவ்வுலக வாழ்க்கைச் சுகங்களையும் இன்பங்களையும் தரவல்லன அல்ல என்பதாகும். மாறாக வாழ்க்கை இன்பங்களை அனுபவிப்பதற்கும், திடீர் திடீரெனப் பணம், பொருள் பண்டங்களைச் சேர்த்துக் கொள்வதற்கும், புகழ், அந்தஸ்து செல்வாக்குகளை அடைவதற்கும் அறக் கோட்பாடுகளும், நீதி நெறிகளும் குறுக்கே நிற்கின்றன, முன்னேற்றத்திற்கு தடை விதிக்கின்றன என்ற நம்பிக்கையும் எண்ணமும் மனித சமுதாயங்களில் வலுப்பெற்று வருகின்றன.

அறவழிகள், புண்ணிய வழிகள் ஆகும். அதனால் அவை மறு உலக சுகத்திற்கும் மறுமை இன்பத்திற்கும் தேவையானவையேயன்றி இம்மை இன்பத்திற்கு அல்ல என்ற கருத்தையும் சிலர் கூறிவருகின்றனர். இன்றைய சமுதாயத்தின் பரிதாபநிலைக்கு இத்தகைய விபரீதப் போக்கே காரணமாக உள்ளது.

"விபரீதப் புத்தி நாசகாலம்" என்பது ஆன்றோர் வாக்கு. ஆன்றோரின் வாக்கிற்கும் சான்றோரின் கூற்றுக்கும் இன்று யார் மதிப்புக் கொடுக்கிறார்கள். இவற்றை நம்புவதற்கோ, ஏற்பதற்கோ அவற்றிற்குப் பணிவதற்கோ இன்று மக்களில பலர் தயாராக இல்லை. மாறாக விஞ்ஞானத்திற்குப் பின்னால் செல்கின்றனர். விஞ்ஞானம் கூறும் விளக்கங்களை வியப்போடு கேட்கின்றனர். நம்புகின்றனர். விஞ்ஞானம் தரும் கட்டளைக்குப் பணிகின்றனர்.

இதுதான் இன்றைய நிலை. ஆன்றோர் வாக்குகள், அறம் சார்ந்த விளக்கங்கள், நீதி நெறிமுறைகள் ஆகியவற்றை வாழ்க்கையில் மேற் கொள்பவர்கள் பிற்போக்காளர்கள் என்றும் சமூக பொருளாதார முன்னேற்றங்களிற்குத் தடையாக உள்ளவர்கள் என்றும் கொள்ளப்படுகின்றனர். இது எந்த வகையிலும் நீதியற்ற கருத்து என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

இவ்வுலக சுகம், இன்பம், மகிழ்ச்சி என்பன வெறுமனே பொருள், பணம், செல்வம் ஆகியவற்றில் மாத்திரம் தங்கியிருக்கவில்லை என்பது பலருக்குத் தெரிவதில்லை. சமுதாயத்தில் அமைதி, ஒழுங்கு, 03

**நல்வாழ்விற்குறிய நடைமுறைச் சிந்தனைகள்...**

02

கட்டுப்பாடு, நிம்மதி, சாந்தி, சமாதானம், பாதுகாப்பு என்பன இல்லையானால் எத்தனை கோடி செல்வங்கள் இருந்தும் என்ன பயன்?

பொய்யர்கள், புரட்டர்கள், நன்றிகெட்டவர்கள், திருடர்கள், கொலைகாரர்கள், வஞ்சகர்கள் என்போர் பெருந்தொகையில் இருக்கும் சமுதாயத்தில் எவ்வாறு அமைதியும், நிம்மதியும் இருக்க முடியும். அத்தகைய அமைதியற்ற சூழலில் மக்கள் வாழ்வில் மகிழ்ச்சி காண்பது எங்ஙனம்?

அதனாலேயே நமது மூததையர்கள் அறநெறிகளையும் நீதி முறைகளையும் தர்மக் கோட்பாடுகளையும் வகுத்துத் தந்தனர். நமது மூததையர் அவற்றை சமூக நிதிச்சட்டங்கள் என்றனர். அவற்றை கடைபிடிக்குமாறு வற்புறுத்தினர்.

அறங்களும், நீதிநெறி முறைகளும் மறுஉலக இன்பத்திற்கு மாத்திரமல்ல. இவ்வுலக அமைதிக்கும், வாழ்க்கை சுதந்திரத்திற்கும் இன்றியமையாதன என்பதையும் உணர்த்தினர். நீதிச் சட்டங்கள் ஒரு போதும் பிற்போக்கானவையல்ல. வாழ்வின் முன்னேற்றத்திற்குறியன. அன்பும், அறமும், உண்மையும், அஹிம்சையும் முத்துக்குவித்தாகும்.

பின்பு பார்த்துக் கொள்ளலாம் என அவற்றை ஒதுக்கிவைப்பது எத்துனை அறிவீனம் "**அன்பும் அறனும் உடைத்தாயின் இவ்வாழ்க்கை, பண்பும் பயனும் அது**" என்றாரே வள்ளுவர். இல்லற வாழ்க்கை சுகம் பேற வேண்டுமானால் அன்பும் அறனும் வேண்டும்.

நட்பு மலர வேண்டுமானால் பரஸ்பர நம்பிக்கை தேவை. சமூக அரசியல் பொருளாதார விருத்திக்கும் மனித விழுமியங்களை மதிக்கின்ற மனித வளம் வேண்டும்.

எனவே அன்பு, நேர்மை, உண்மை, இன்சொல், நன்றிமறவாமை, நீதி போன்றன எமது இவ்வுலக வாழ்க்கைக்கு இன்பங்களையும் தரவல்லன என்பதை உணர்வோம். அவற்றை நம்புவோம், அவற்றிற்கு பணிவோம், நாளும் எம் வாழ்க்கையில் நல்ல பண்புகளை கடைபிடித்தொழுகி நல்வாழ்வு வாழ்வோமாக.

**குமாரசாமி சோமசுந்தரம்.**

# அமைதியும் பன்மைத்துவமும்

சில்ம், ஸலாம் ஆகிய அரபு சொற்கள் அமைதி, சமாதானம், இணங்கிச் செல்லல், சாதுவாக நடந்து கொள்ளல் என்று பல்வேறு அர்த்தங்களையும் பொருள்கோடல்களையும் தருகின்றன. இஸ்லாம் என்பது அதிலிருந்து பிரிந்த ஒரு சொல்லாகும். ஆதலால் அமைதி, சமாதானம் எனும் அர்த்தத்தை அது பிரதிபலிக்கின்றது.

"இஸ்லாம்" என்பது ஒருவர் தனது விருப்பங்களை இறைவனின் திருப்திக்காக அல்லது விருப்புக்காக அர்ப்பணித்து அடிபணிவதையும் குறிக்கின்றது. அவ்வாறு அடிபணியும் ஒருவன் அல்லாஹ்வுடனான அமைதியையும் சமாதானத்தையும் விரும்புகின்றான். அவ்வாறே அவனது படைப்பினங்களுக்கான அமைதியையும் சமாதானத்தையும் அவன் விரும்புகின்றான்.

அமைதியை விரும்பி, நேசித்து அதற்காகப் பிரார்த்திப்பதே இஸ்லாம் என்பதன் பொருளாகக் கொள்ளப்படுவதை இங்கு அவதானிக்கலாம். இதனால்தான் அமைதியை ஒவ்வொரு முஸ்லிமின் வாழ்விலும் ஒவ்வொரு நாளும் பறை சாற்றும் வகையில் இஸ்லாம் மனிதர்களுக்கிடையிலான உறவுகளையும் தொடர்புகளையும் வடிவமைக்கின்றது. தொழுகை நிறைவுற்ற பின் இரு புயங்களிலுமுள்ள வான தூதர்களை (மலக்குமார்களை) நோக்கி "அஸ்ஸலாமு அலைக்கும்" உங்கள் மீது சாந்தி உண்டாகட்டும் என்று ஒரு முஸ்லிம் பிரார்த்தனை புரிகின்றான்.

பிற மனிதர்களைக் காணும் போதெல்லாம் "உங்கள் மீது அமைதியும் சாந்தியும் உண்டாகட்டும்" என்று கூறுமாறு இஸ்லாம் பணிந்துள்ளது. இதுவே ஒரு முஸ்லிமின் வாழ்த்து முறையாகும். மு.ஃ.மின்களிலேயே தலை சிறந்ததாகும். "தெரியாதவர்கள், தெரிந்தவர்கள், அறியாதவர்கள், அறிந்தவர்கள் அனைவர் மீதும் ஸலாம் கூறுமாறு இறைத்துதர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் முஸ்லிம்களைப் பணிந்துள்ளார்கள். ஸலாமை (அமைதியை) பரப்புங்கள்" என்பது அன்னாரின் மற்றொரு அமுத வாக்கு.

இவ்வாறு அமைதியையும் சாந்தியையும் சமாதானத்தையும் வலியுறுத்தும் மார்க்கம் இஸ்லாம். தனிமனிதனிலும் குடும்பத்திலும் சமூக வாழ்விலும் அந்த அமைதியும் சமாதானமும் பிரதிபலிக்க வேண்டும் எனவும் இஸ்லாம் எதிர்பார்க்கின்றது. அந்த இலக்கை அடையவே முழு இஸ்லாத்தினதும் போதனைகளும் வழிகாட்டல்களும் வழங்கப்பட்டுள்ளன. உலக வாழ்வில் ஒரு முஸ்லிம் அடையும் மிகப் பெரிய இலக்கும் இதுவே.

"எமது இரட்சகனே! உலகிலும் மறுமையிலும் எமக்கு மிகச் சிறந்ததையே நீ அருள்வாயாக" எனும் பிரார்த்தனையை அல்குர்ஆன் விசுவாசிகளுக்குக் கற்றுக் கொடுக்கின்றது. இந்தப் பிரார்த்தனை யின் சாராம்சமே ஒரு முஸ்லிமின் வாழ்வாகும். அதில் அவன் பெறும் மன அமைதியும் சமூக அமைதியும் ஈடேற்றமும் மிகவும் முக்கியமான வை.

இஸ்லாத்தின் இந்தப்பொருள் கோடலையும் ஆழ்ந்த அர்த்தத் தையும் புரிந்து கொள்ளாத அல்லது புரிந்து கொள்வதில் கரிசனை காட்டாதவர்கள் இஸ்லாமிய வரலாற்றையும் அதன் ஏற்ற இறக்கங்களையும் மிகத் தவறாக விளங்கிக் கொண்டனர். இஸ்லாத்தை மிகச் சரியாக விளங்கியவர்களில் சிலரும் காழ்ப்புணர்வுக்கும் குரோத மனப்பாங்கிற்கும் உள்ளாகினர். இஸ்லாமிய வரலாறு போர்களின் வரலாறாகவே அவர்களால் பார்க்கப் பட்டது.

இஸ்லாத்தை அமைதிக்கு எதிரான தாக அவர்கள் பொருள்கோடல் செய்தனர். ஆனால் உண்மை அதற்குப் புறம்பானது. இஸ்லாம் அடிப்படையில் சமாதானத்தின்,

04

## அமைதியும் பன்மைத்துவமும்...

03

அமைதியின் மார்க்கம்.

அமைதியும் நிம்மதியும் கோலோச்சு கின்ற ஒரு சமூகமே உயர்ந்த நாகரீகமொன்றைக் கட்டியெழுப்பு வதற்கான மனோதிடத்தையும் மானசீகப் பலத்தையும் பெறுகின்றது. அறம் சார்ந்த, தார்மீகப் பெறுமானங்களுடன் கூடிய பொருள்மைய (Meterial) நாகரிக மொன்றை சிருஷ்டிக்க அந்த சமூகத்தால் தான் முடிகின்றது. அத்தகைய நாகரிகப் பணியும் பங்களிப்பும் தனது சொந்த சமூகத்திற்குள் மட்டும் மட்டுப்படுத்தப்படாமல் அதன் எல்லைகளைத் தாண்டி பிற சமூகங்களையும் நோக்கி நீட்சி பெறுகின்றது.

இஸ்லாம் வரலாற்றில் மனித நாகரிகத்திற்கும் கலாசாரத்திற்கும் ஆற்றிய மகத்தான பங்களிப்பை இந்தப் பின்னணியில் இருந்தே நோக்க வேண்டும். அது தனக்குள்ளும் வெளியிலும் பேணிய அமைதி வழியிலான வாழ்வியல் பெறுமானங்களே அதன் அடித்தளமாக உள்ளது. இஸ்லாம் வன்முறையிலிருந்து எழவில்லை. அதைத் தூண்டவில்லை. சகிப்பின் அத்திவாரமாக அது நிலை பெற்றுள்ளது. உலக நாகரிக வளர்ச்சிக்கு இஸ்லாம் ஆற்றியுள்ள வரலாற்றுப் பங்கினை அனைவரும் ஏற்றுள்ளதை நாம் மறந்து விடக் கூடாது.

பேராசிரியர் H.A.B. Gibb இஸ்லாத்தின் சகிப்பையும் அதனடிப்படையிலான அதன் நாகரிகப் பங்களிப்பையும் குறித்துப் பின்வருமாறு எழுதுகின்றார்.

“இஸ்லாத்தினதும் இஸ்லாமிய சமூகத்தினதும் சிறப்ப டையாளம் என்னவெனில், அது பல்வேறு வகை மனிதர்களையும் நிறத்தவர்களையும் தன்னுள் ஈர்த்துக் கொண்டிருப்பதுதான். பல்வேறுபட்ட மக்கள் மனங்களில் அது சகோதரத்துவம் எனும் ஆழமான உணர்வை விதைத்துள்ளதே அதற்கான காரணம். மட்டுமன்றி சமூகம் பற்றிய இஸ்லாத்தில் பரந்த, ஆழமான நோக்கும் அவர்களை இஸ்லாத்தின்பால் இணைய வழியமைத்து விடுகின்றது.”

Philif k, Hitti தனது History of Arabs என்ற நூலிலும் இஸ்லாத்தின் இந்த வரலாற்றுப் பங்களிப்புக் குறித்து விரிவாக ஆராய்கின்றார். அவர் பின்வருமாறு எழுதுகின்றார்.

“மத்திய காலத்தின் ஆரம்பத்தில் மனித இனத்தின் முன்னேற்றத்திற்காக பணியாற்றியவர்கள் அரேபியர்களைப் போல வேறு யாரும் இலர்.”

Encyclopadic Des Sciences Religieusus எனும் நூலின் **STANISLAS GUYARD** என்பவர் கீழ்வருமாறு எழுதுகின்றார்.

“மத்திய கால வரலாற்றில் இஸ்லாத்தின் வரலாறு என்பது நாகரிகத்தின் வரலாறாகவே விளங்குகின்றது. புறக்கணிக்கப்பட்ட கிரேக்க விஞ்ஞானத்தையும் தத்துவ சாஸ்திரத்தையும் அழிவிலிருந்து பாதுகாத்து மேற்குலகை எழுச்சி பெறச் செய்து, அறிவியக்க வளர்ச்சிக்கு காரண கர்த்தாக்களாக இருந்தவர்கள் முஸ்லிம்களே. இந்த வகையில் அவர்களுக்கு நாம் மிகவும் கடமைப்பட்டுள்ளோம். ஏழாம் நூற்றாண்டில் பழைய உலகம் மரண வேதனையை அனுபவித்துக் கொண்டிருந்த போது அரேபியர்கள் அரசியல் ரீதியாகப் பெற்ற வெற்றி இந்த உலகிற்குப் புதிய இரத்தத்தைப் பாய்ச்சியது.”

அமெரிக்க வரலாற்றாசிரியர் **ஜோர்ச் காட்டன்** Introduction To The History Of Science “மனித சமூகத்திற்குத் தேவையான சகல பணிகளும் முஸ்லிம்களால் பூர்த்தி செய்யப்பட்டிருக் கின்றன. ஒப்புவமை இல்லாத தத்துவஞானி **அல் பராபி** மாபெரும் கணித மேதையான **அபுல் காமில் இப்ராஹீம், இப்னு ஸீனா** ஆகியோர் முஸ்லிம்களே. தலை சிறந்த புவியியலாளர் **அல் மஸ்ஊதி**யும் வரலாற்று ஆசிரியர் **அத்தபரியும்** முஸ்லிம்களே.”இறுதியாக C.E. Storess என்பவர் அவரது Many greeds one cross எனும் நூலில் பின்வருமாறு பகர்கிறார்.

“இருள் கவிந்திருந்த யுகத்தில் விஞ்ஞானம் தத்துவம் போன்ற ஒளிச்சுடர்களை உயர்த்திப் பிடித்த பெருமை முஸ்லிம்களையே சாரும். **யூக்லிட், தொலமி** போன்றோரின் நூல்களை அரபுமொழியில் பெயர்ந்து பாதுகாத்தவர்கள் முஸ்லிம்களே. அதுவே ஐரோப்பிய மறுமலர்ச்சிக்கு இட்டுச் சென்றது.” இஸ்லாம் அமைதியின் மார்க்கம். மனித குல மேன்மையிலும் உயர்விலும் கரிசனை கொண்ட மார்க்கம். நன்மை பயப்பதே அதன் உன்னதமான குறிக்கோள். மனித குலத்தை நிறம், இனம், பால், மொழி, குலம், கோத்திரம், தேசம், நாடு, நகரம், வட்டாரம் என்ற வேறுபாடுகளைத் தாண்டி சமத்துவம் சகோதரத்துவம், சுதந்திரம் ஆகியவற்றின் அடிப்படையில் ஒருங்கிணைக்கும் ஆற்றலும் வலிமையும் அதனிடம் உள்ளது. இஸ்லாத்தின் கடந்த கால வரலாற்றை நேர்மையாக ஆராய்ந்தால் இந்த உண்மையை மிகத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

## அல்குர்ஆனைப் பற்றி அல்குர்ஆன்!



திருக்குர்ஆன் ஆகிய மாமறையைப்பற்றி, மேன்மை மிக்கப் பேரறிஞர்கள், மாமேதைகள் ஆகிய ஏற்றிப் போற்றிப் பெருமைப்படுத்தி பேசியிருக்கிறார்கள்.

இஸ்லாத்தையும், குர்ஆனையும் பற்றி மட்டம் தட்டி இழிவு செய்யவேண்டுமென்ற துர் எண்ணத்தால் உந்தப்பட்ட ‘வில்லியம் மூய்ர்’ என்பவர், அதற்காக வேண்டியே அரபி இலக்கியத்தைப் பல வருடம் முயன்று கற்று, குர் ஆனிலே குறை உண்டா என்று துருவித் துருவி ஆராய்ந்து, குறை காண முடியாமல் படுதோல்வி அடைந்தார்.

05

## அல்குர்ஆனைப் பற்றி அல்குர்ஆன்!

04 பிறகு, அந்த எண்ணத்தை விடுவித்து, இஸ்லாத்தைப் பற்றி திரு நபியைப் பற்றி திருமறையைப்பற்றி எல்லாம் புகழ்ந்துரைக்க வேண்டியதாயிற்று. இப்படி, ஆரம்பத்தில் எதிர்த்தவர்களெல்லாம் கூட, முடிவில் ஏற்றிப் போற்றும் பெருமையைப் பெற்ற திருமறையைப்பற்றி, அதே திருமறை என்ன சொல்கிறதென்பதை நாம் தெரிந்து வைக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

### இனி திருமறையைப் பற்றிக் கூறும் வசனங்களைக் காண்போம்:-

- அல் குர்ஆனாகிய இது வேத நூல், இதில் சந்தேகமே இல்லை, பயபக்தியுடையவர்களுக்கு (இது) நேரான வழியைக் காட்டும். (2:1-2)
- இந்தக் குர்ஆனில், சகல உதாரணங்களையும்மனிதர்களுக்கு நாம் விவரித்துக் கூறியுள்ளோம். எனினும், மனிதர்களில் பெரும்பாலோர், இதனை நிராகரிக்காமல் இருக்கவில்லை. (17:89)
- (நபியே) நிச்சயமாக, மிக்க ஞானமுடைய (எல்லா வற்றையும்) நன்கறிந்தோன் (ஆகிய இறைவன்) மூலமாக, இந்தக் குர்ஆன் உமக்குக் கொடுக்கப்பட்டது. (27:6)
- (நபியே!) அவர்களுக்கு ஓதிக்காண்பிக்கப்படும். (இந்த) வேதத்தை நாமே உம்மீது இறக்கி வைத்துள்ளோம் என்பதற்கு, (இதுவே) அவர்களுக்குப் போதுமான (சான்றாக இருக்கிற) தல்லவா? (ஏனென்றால்) நிச்சயமாக இதில், (இறைவனுடைய) அருளும், விசுவாசங்கொண்ட ஜனங்களுக்கு ஒரு நினைவூட்டலும் இருக்கின்றன (29:51)
- (நபியே!) வஹீ மூலம் உமக்கு அறிவிக்கப்பெற்ற இந்தக் குர்ஆன் ஆனதைப் பலமாகப் பிடித்துக் கொள்ளும், நிச்சயமாக நீர் நேரான பாதையில்தான் இருக்கின்றீர் (நிச்சயமாக குர்ஆன் ஆன) இது உமக்கும் உம்முடைய ஜனங்களுக்கும் ஒரு நல்லுபதேசமாகும். இதிலுள்ளபடி நடந்து கொண்டீர்களா (என்பதைப் பற்றிப்) பின்னர் நீங்கள் கேள்வி கேட்கப்படுவீர்கள். (43:43-44)
- (குர்ஆன் ஆகிய) இது உலகங்கள் யாவுக்கும், உங்களில் எவன் நேரான வழியில் செல்ல விரும்புகின்றானோ அவனுக்கும் ஒரு நல்லுப தேசமேயன்றி வேறில்லை. (82:27:28)
- (நபியே!) யாதொரு மலையின்மீதும் நாம் இந்தக் குர்ஆனை இறக்கிவைத்தால், அது அல்லாஹ்வின் பயத்தால் நடுங்கி வெடித்துப்பிளந்து போவதை நிச்சயமாக நீர் கண்டிருப்பீர். மனிதர்கள் உற்றுணர்ந்து பார்க்கும் பொருட்டு, இவ் உதாரணங்களை நாம் கூறுகின்றோம். (59:21)
- (நிராகரிப்போராகிய) அவர்கள் இந்தக் குர்ஆனை ஆராய்ந்து பார்க்க வேண்டாமா? அல்லது (அவர்கள் ஆராய்ந்து பார்க்க முடியாதபடி அவர்களது) இதயங்கள் மீது தாழிடப்பட்டு விட்டதா? (47:27)
- இந்தக் குர்ஆனை அரபி அல்லாத (வேறொரு) மொழியில் நாம் இறக்கி வைத்திருந்தால், (இந்த மக்கா வாசிகள்) "இதனுடைய வசனங்கள் (நம்முடைய) மொழியில் விவரித்துக் கூறப்பட்டிருக்க வேண்டாமா? இதுவோ அரபி அல்லாத மொழி; நாமோ (அந்த மொழியை அறியாத) அரபிகள்" என்று நிச்சயமாகக் கூறுவார்கள். (எனவே நபியே!) நீர் கூறும்; இது (அவர்களுடைய அரபி மொழியில் இருப்பதுடன்) விசுவாசங் கொண்டவர்களுக்கு நேரான வழியாகவும் (சிறந்த) சஞ்சீவியாகவும்இருக்கின்றது!" (41:44)

இன்னும் இவைபோல் ஏராளமான வசனங்கள் உள்ளன. பல இடங்களில் குர்ஆனைப் பற்றிய செய்திகள், குர்ஆனில் கூறப்பட்டுள்ளன. அவை யாவும் நாம் பார்த்தறிய வேண்டிய படிப்பினைகளாகும்!

## முதலில் உங்களில் இருந்து ஆரம்பியுங்கள்

- **உலகிலிருந்து தீமைகளைக் களைய நீங்கள் விரும்பினால் முதலில் உங்கள் வாழ்விலிருந்து தீமைகளைக் களையுங்கள்.**
- **உலகில் நன்மைகள் மேலோங்க வேண்டுமென்று நீங்கள் விரும்பினால் முதலில் உங்கள் வாழ்க்கையை நன்மை நிறைந்ததாய் ஆக்குங்கள்.**
- **பிற மனிதர்களை நன்மை செய்யும்படி ஏவிவிட்டு உங்களை நீங்கள் மறந்து விடுகின்றீர்கள்? (அல்குர்ஆன் 2:44)**

### வீழ்வேனென்று நினைத்தாயோ?

தேடிச் சோறு நிதத் தின்று
பலசின்னஞ் சிறு கதைகள் பேசி
மனம்வாடித் துன்பம் மிக உழன்று
பிறர்வாடப் பல செயல்கள் செய்து
நரைகூடிக் கிழப் பருவமெய்தி
கொடுங்கூற்றுக் கிரையெனப் பின்
மாயும் பலவேடிக்கை மனிதரைப்
போலே நான்

வீழ்வேனென்று நினைத்தாயோ?

-மகாகவி பாரதியார்.

"அஞ்சாமை ஈகை அறிவூக்கம்
இந் நான்கும் எஞ்சாமை
வேந்தர்க் கியழ்பு"

-குறள்

## நன்மையைக் கொண்டே தீமையைத் தடுத்திடு!

நன்மையும் தீமையும் சமமாக மாட்டாது. மிகச் சிறந்த நன்மையைக் கொண்டு தீமையைத் தடுப்பீராக. அப்போது கடும் பகை கொண்டவர்கள்கூட உற்ற நண்பர்களாகி விடுவதைக் காண்பீர் என்று கூறுகிறது அல்குர்ஆன். (41-34,35)

நெருப்பை நெருப்பால் அனைக்க முடியாது.

அது போலவே ஒரு தீமையை இன்னொரு தீமையின் வாயிலாகக் களைந்து விட முடியாது. வகுப்பு வாதத்தை இன்னொரு வகுப்பு வாதத்தால் ஒழிக்க முடியாது.

வகுப்புவாதிகள், இனவாதிகள் துவேஷத்தை விதைத்தால் நாம் அன்பை விதைப்போம்.

வகுப்புவாதிகள், இனவாதிகள் பொய்ச் செய்தியைப் பரப்பினால் நாம் உண்மையைச் சொல்லுவோம்.

**டாக்டர் கே.வி.எஸ்.ஹபீப் முஹம்மத்**

"…..தூங்கிக் கெடுத்தவர்கள் நாட்டைக் கெடுத்துக் கொண்டு தாமும் கெட்டார்."

சில பொறுப்புள்ள மனிதரின் தூக்கத்தினால்ப் பல பொன்னான வேலையெல்லாம் தூங்குதப்பா"

**பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்**



## நபி (ஸல்) அவர்களின் வாழ்வும், வாக்கும் என்றும் பின்பற்றத்தக்கவை

இது பெய்ருட் நகரத்தில் இடம்பெற்ற உண்மைச் சம்பவம். ஒரு இளைஞன் தனது மாடியிலிருந்து வீதியைப் பார்த்துக் கொண்டிருந்தவர் ஒரு காட்சியைக் காண்கிறார்.

இவ் வேளையில் ஒரு முதியவருக்கும் ஒரு இளைஞனுக்கும் வாக்குவாதம் ஏற்படுகிறது. திடீரென வயோதிபர் இளைஞனின் கண்ணத்தில் ஓங்கி அறைந்துவிட்டார்.

இந்த இளைஞனோ எதுவும் பேசாமல் கண்ணத்தை தடவியவாரே அவ்விடத்திலிருந்து கடந்துசென்று கொண்டிருந்தான்.

பெய்ருட் முஸ்லிம்கள் பெரும்பான்மை யாக வாழும் நாடு எனினும் அந்த இளைஞன் கூக்குரலிட்டுக் கூட்டத்தைக் கூட்டாமல், ஆர்ப்பாட்டம் செய்யாது ஏன் பதிலிற்கு ஓர் வார்த்தையேனும் கூறாது அமைதியாக சென்று கொண்டிருந்த இளைஞனை அந்த ஆங்கில அதிகாரி கீழே இறங்கி வந்து விசாரித்தார்.

இதற்கு அந்த இளைஞன் "நான் அந்த வயோதிபரிடம் கடன் வாங்கியிருந்தேன். எனினும் உரிய காலத்தில் அவருக்கு அதனை திருப்பிக் கொடுக்க முடியவில்லை ஆனால் ஆத்திரத்தில் அவர் அவனை அடித்துவிட்டார்." என்று அந்த இளைஞன் அமைதியாக பதிலளித்தான்.

" இதற்காக அவ் வயோதிபர் உன்னை அடிக்கலாமா?" நீ ஏன் பதிலிற்கு எதுவும் செய்யாமல் அமைதியாகச் செல்கின்றாய்" என வினவினார் அந்த ஆங்கில அதிகாரி.

வாங்கிய கடனை உரிய நேரத்தில் திருப்பி ஒப்படைக்குமாறு முஹம்மது நபி (ஸல்) அவர்கள் எங்களுக்கு போதித்துள்ளார். குறிப்பிட்ட தவணை யில் திருப்பிக் கொடுக்காமல் இருந்தது எனது தவறுதானே என இம் முஸ்லிம் இளைஞன் பதிலளித்தான்.

இதற்கு இந்த ஆங்கிலேயர் "இதற்காக அவர் உன்னை அடித்தது தவறு. வேறுயாராக இருந்தாலும் திருப்பி அடித்திருப்பார்கள்" என்று கூறினார்.

"முதியவர்களிற்கு மரியாதை செய்யுங்கள், சிறுவர்கள் மீது அன்பு செலுத்துங்கள்" என்று முஹம்மது நபி (ஸல்) அவர்கள் எமக்குப் போதித்துள்ளார்கள்.

இதனை மீறி அம்முதியவர் மீது கைவைத்திருந்தால் நான் முஹம்மம நபி (ஸல்) அவர்களின் போதனையை மீறி குற்றவாளியாகி விடுவேன். என உணர்ச்சியுடன் பதிலளித்தான் அந்த இளைஞன்.

இதனைக் கேட்ட அந்த ஆங்கிலேயர் மிகவும் ஆச்சரியம் அடைந்தார். ஆயிரத்து நுறு ஆண்டுகளுக்கு முன்பு முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அறிவுறுத்திய இன்னும் மேற்கோளாக எடுத்துக் காண்பிக்கப்பட்டு ஒரு முன்மாதிரியாக கருதப்படுகின்றது என்றால் அந்த மாமனிதரின் வாழ்க்கை முறை எத்தகைய மகத்துவமுடைய தாக இருக்கவேண்டும் என்று அந்த ஆங்கிலேயர் சிந்திக்கலானார்.

இந்த ஆங்கிலேயர் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றைத் தேடிப்படிக்க ஆரம்பித் தார். அவர் இறுதியில் முஹம்மது நபி (ஸல்) அவர்கள், அல்குர்ஆனில் கூறப்படுவது போன்று முழு உலகத்திற்கும் நேர்வழி காட்டுவதற் கான ஓர் அருட்கொடைதான் என்பதை புரிந்து கொண்டவராக, அல்குர்ஆனை படிக்க ஆரம்பித்தார்.

இறுதியில் புனித இஸ்லாம்தான் மனித குலத்திற்கு நேர்வழிகாட்ட வந்த மார்க்கம் என்பதை மனப்பூர்வமாக உணர்ந்து அவர் இஸ்லாத்தை தனது மார்க்கமாக ஏற்றுக்கொண்டார். இவர்தான் மார்மடியுக் பிக்தால்.

இவர் அரபு மொழியை முறையாகக் கற்றார். பின்னர் புனித அல்குர்ஆனை ஆங்கில மொழியில் மொழி பெயர்த்தார். எகிப்து அல்-அஸ்ஹர் சர்வகால சாலையின் இஸ்லாமிய அறிஞர்களின் சிபாரிசுடன் இதனை வெளியிட்டார். இச் சம்பவம்

07

## நபி (ஸல்) அவர்களின் வாழ்வும், வாக்கும்...

06 முஹம்மது நபி (ஸல்) அவர்களின் வாழ்வும், வாக்கும் அன்றும் இன்றும் என்றும் கடைபிடிக்க சிறப்பானவை பயன்மிக்கவை என்பதை இச்சம்பவம் உலகிற்கு எடுத்துக்காட்டுகின்றது.

**மக்கள் பணிமனையினால் ZOOM வழியூடாக தேசத்தைக் கட்டியெழுப்புவோம் என்னும் மகுடத்தின் கீழ் சிறந்த வளவாலர்களைக் கொண்டு ஒவ்வொரு விஷேட தலைப்புக்களில் நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றது. அவற்றின் சில சுவரொட்டிகள் உங்கள் பார்வைக்கு**







# திருக்குர்ஆன் ஓர் வாழும் அற்புதம்!



நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கி.பி. 570-ல் பிறந்தார்கள். இந்தக் கால கட்டத்தில் உலக மக்கள் அறிவியலில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தார்கள். உலகம் உருண்டை என்ற சாதாரண அறிவு கூட அன்றைய மக்களுக்கு இருக்கவில்லை.

இத்தகைய காலத்தில் வாழ்ந்தவர் எவ்வளவு பெரிய மேதையாக இருந்தாலும், அவரது காலத்து அறிவைக் கடந்து எதையும் கூறவே இயலாது. சுமார் நூறு வருடம் கடந்த பின் அவரது நூலை வாசித்தால் அதில் பல தவறுகள் இருப்பதை உலகம் கண்டுகொள்ளும்.

நூறு வருடங்களுக்குப் பின் என்ன நடக்கும்; என்னென்ன கண்டு பிடிக்கப்படும் என்ற விபரங்களை நூறு வருடங்களுக்கு முன் வாழ்ந்தவரால் ஊகம் செய்ய இயலாது என்பதே இதற்குக் காரணம்.

பல அறிஞர்கள் கூட்டாகச் சேர்ந்து உருவாக்கிய நூலாக இருந்தால் கூட நூறு வருடங்கள் கழித்துப் பார்க்கும் போது அதில் பல தவறுகள் இருப்பதைக் காண முடியும். அந்த நூலே காலத்திற்கு ஒவ்வாத நூலாகி விடும்.

ஆனால் எழுதவும், படிக்கவும் தெரியாத, மிகவும் பின்தங்கிய சமுதாயத்தில் வாழ்ந்த ஒருவர் எதை இறை வேதம் என்று அறிமுகம் செய்தாரோ அந்த வேதத்தில் எந்த ஒன்றையும் தவறானது என்று இன்றைக்கும் நிரூபிக்க முடியவில்லை.

திருக்குர்ஆனைப் பொருத்த வரை அது ஆன்மீகத்தைப் பற்றி மட்டும் பேசவில்லை. எல்லாத் துறைகளைப் பற்றியும் ஆங்காங்கே பேசுகின்றது.

பூமி மற்றும் ஏனைய கோல்களின் அமைப்பு, வானில் இருக்கின்ற அதிசயங்கள், புவியியல் மற்றும் வானியல் குறித்துப் பேசும் போது, இந்த நூற்றாண்டின் மாமேதையும், வானியல் நிபுணரும் பேசினால் எவ்வாறு இருக்குமோ அதை விடச் சிறப்பாக திருக்குர்ஆன் பேசுகிறது. அது போல் மனிதன் மற்றும் உயிரினங்கள், அவற்றின் உள் அமைப்புக்கள், உயிரினங்கள் உற்பத்தியாகும் விதம் எனப் பல விஷயங்களைக் குர்ஆன் பேசுகிறது. 14 நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த மனிதன் பேசுவது போல் பேசவில்லை. இந்த நூற்றாண்டின் தேர்ந்த மருத்துவ மேதை பேசுவதை விட அழகாகப் பேசுகிறது.

தாவரங்களைப் பற்றிப் பேசினாலும், மலைகளைப் பற்றிப் பேசினாலும், நதிகளைப் பற்றிப் பேசினாலும் 14 நூற்றாண்டு களுக்கு முன் வாழ்ந்தவர் பேசியது போல் திருக்குர்ஆனின் பேச்சு இல்லை.

அது மட்டுமின்றி சென்ற நூற்றாண்டுக்கு முன்னால் வரை கண்டுபிடிக்கப்படாத, தற்போது கண்டுபிடிக்கப்பட்ட பல விஷயங்களை குர்ஆன் அன்றே சொல்லியிருக்கிறது.

பல்வேறு துறைகளிலும் தேர்ந்த அறிவுடைய ஒருவர் பேசுவதை விடச் சிறப்பாக திருக்குர்ஆன் பேசுவதையும், நபிகள் நாயகத்தின் காலச் சூழ்நிலையையும் ஒரு சேர சிந்திப்பவர்கள் “இது முஹம்மது நபியின் சொந்த வார்த்தையாக இருக்க முடியாது, முக்காலமும் உணர்ந்த இறைவனின் வார்த்தையாகத் தான் இருக்க முடியும்’’ என்ற முடிவுக்குத்தான் வந்தாக வேண்டும்.

அறிவியல், நவீன கண்டுபிடிப்புக்கள் மட்டுமின்றி குர்ஆன் கூறுகின்ற அரசியல் சட்டங்கள், குற்றவியல் மற்றும் சிவில் சட்டங்களை ஒருவர் ஆய்வு செய்தால் இன்று உலகமெங்கும் உள்ள எல்லாச் சட்டங்களை விட அது சிறந்து விளங்குவதையும், மனித குலத்திற்கு அதிகப் பயன் தரக்கூடிய வகையில் அமைந்திருப்பதையும் அறிந்து கொள்வார். முஸ்லிமல்லாதவர்கள் கூட குர்ஆன் கூறும் சட்டங்களை 08

## திருக்குர்ஆன் ஓர் வாழும் அற்புதம்!

07 அமுல்படுத்தக் கோரும் அளவுக்கு குர்ஆன் கூறும் சட்டங்கள் அமைந்துள்ளன.

ஏராளமான சட்டங்களையும், மரபுகளையும், முன் அனுபவங்களையும் ஆய்வு செய்து பல்வேறு சட்ட மேதைகள் உருவாக்கிய சட்டங்களே ஆண்டு தோறும் திருத்தப்பட்டு வரும் நிலையில் இறைச் சட்டங்கள் என முஹம்மது நபி அவர்கள் அறிமுகப்படுத்திய சட்டங்கள் பலராலும் வரவேற்கப்படுவது முஹம்மது நபியின் சொந்தக் கூற்றாக குர்ஆன் இருக்க முடியாது என்பதற்கு மற்றொரு சான்றாக உள்ளது.

அது போல் உலகம் சந்திக்கின்ற தீர்க்க முடியாத பல பிரச்சினைகளுக்கு ஏற்க்கத்தக்க அற்புதமான தீர்வுகளைக் குர்ஆன் கூறுவதும் இது முஹம்மது நபியின் சொந்தக் கூற்று இல்லை என்பதற்கான ஆதாரமாக உள்ளது.

குலம், கோத்திரம், சாதி, இவற்றால் ஏற்படும் தீண்டாமை உலகில் பல நாடுகளில் பல நூறு ஆண்டுகளாகத் தீர்க்கப்படாத பிரச்சினையாக உள்ளது. இந்தச் சிக்கலான பிரச்சினைக்கும் திருக்குர்ஆன் மிக எளிதான தீர்வை வழங்கி தீண்டாமையை அடியோடு ஒழித்துக் கட்டியதை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

எதிர் காலத்தில் நடக்கவுள்ள பல செய்திகளைக் குர்ஆன் கூறுகிறது. அது கூறியவாறு அவற்றுள் பல நிகழ்வுகள் நடந்து முடிந்துள்ளன. வார்த்தைக்கு வார்த்தை நிறைவேறிய இத்தகைய முன்னறிவிப்புகள் ஏராளம். முஹம்மது நபியின் சொந்தக் கூற்றாக குர்ஆன் இருக்கவே முடியாது என்பதற்கு இவை யாவும் ஆதாரங்களாக உள்ளன.

## 2003ம் ஆண்டு தொடக்கம் இனமதபேதமின்றி சகல சிறார்களை உள்வாங்கி முற்றிலும் இலவசமாக நடத்தப்படும் இக்ரா∴ முன்பள்ளியின் காட்சிகள்










## மக்கள் பணிமனையினால் வருடந்தோரும் தேவையுடைய மாணவர்களுக்கு இனமதபேதமின்றி வழங்கி வைக்கப்படும் பாடசாலை உபகரணங்கள், நிகழ்ச்சியின் இறுதியாக நடாத்தப்பட்ட நிகழ்ச்சி









## CORONA VIRUS தொற்றாமல் இருக்க 1441 வருடங்களுக்கு முன்பே அழகிய வழிகாட்டலை உலகிற்கு கற்றுத் தந்த இறைதூதர் முஹம்மத் நபி ( ஸல்) அவர்கள்

1)தனிமைப்படுத்தல்
நபிகளாரின் ஒரு அறிவுரையாகும்

"சிங்கத்திடமிருந்து வெருண்டோடுவது போன்று தொற்று நோயாளிகளிடமிருந்தும் விலகி ஓடிவிடுங்கள்."
புகாரி - பாகம் 7, நூல் 71, எண் 608

2) சமூக விலகல்
நபிகளாரின் அறிவுரையாகும்.

"தொற்று நோயால் பாதிக்கப்பட்டவர்கள் ஆரோக்கியமானவர்களிடமிருந்து விலக்கி வைக்கப்பட வேண்டும்.
புகாரி 6771, முஸ்லிம் 2221

3) பயணத்தடை
நபிகளாரின் அறிவுரையாகும்.

தொற்று நோய் பரவியிருக்கும் பகுதிக்குள் செல்லாதீர்கள். அவ்வாறே தொற்று நோய் பரவியுள்ள பகுதியிலிருந்து வெளியேறாதீர்கள்.
புகாரி 5739, முஸ்லிம் 2219

4) பிறருக்கு பாதிப்பை ஏற்படுத்தாதீர்கள் உங்களிடம் அறிகுறிகள் தென்பட்டால் .

நபி (ஸல்) கூறியுள்ளார்கள்..." பிறருக்கு தீங்கு விளைவிக்காதீர்கள்".
இப்னு மாஜா 2340

5) வீட்டில் இருத்தல்

நபிகளாரின் அறிவுரையாகும்.

தங்களையும் பிறரையும் பாதுகாப்பதற்காக வீட்டிலேயே தங்கி இருந்தவர்கள் எல்லாம் அல்லாஹ்வின் பாதுகாப்பில் இருப்பவர்களாவர்.

முஸ்னத் அஹமத், ஸஹீஹ்

6) வீடே பள்ளிவாசல்
தேவையான. காலகட்டங்களில்.

நபி (ஸல்) கூறினார்கள்..."முழு உலகும் தொழும் இடமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது, கல்லறைகளையும் கழிவறைகளையும் தவிர."
திர்மிதி; அஸ்ஸலாஹ்..291

7) நிவாரணம் உண்டு
பொறுமை அவசியம்.

நப(ஸல்) கூறியுள்ளார்கள் - "நிவாரணத்தை ஏற்படுத்தாமல் அல்லாஹ் எந்த ஒரு நோயையும் அனுப்புவதில்லை."
புகாரி பாகம் 7, நூல் 71, எண் 582.

8) சிகிச்சை செய்வோம்.அல்லாஹ் குணமளிப்பான்*
நபி(ஸல்) கூறினார்கள்: ஒவ்வொரு நோய்க்கும் நிவாரணம் இருக்கின்றது. ஒரு நோய்க்கு சிகிச்சை அளிக்கப்படுகின்றது எனில் அது அல்லாஹ்வின் அனுமதி கொண்டே நீங்குகின்றது.
முஸ்லிம் # 2204


9) முகக் கவசம்
நபிகளாரின் அறிவுரையாகும்.

நபியவர்கள் தும்மும் போது தம் கைகளைக் கொண்டோ அல்லது தனது ஆடையைக் கொண்டோ முகத்தை மூடிக் கொள்வார்கள்
அபுதாவூத், திர்மிதி (பாகம் 43, எண் 269)

10) வீட்டிற்குள் நுழைந்ததும் கைகளைக் கழுவுங்கள்
நபி(ஸல்) கூறினார்கள் : தூய்மை ஈமானில் பாதியாகும்.
முஸ்லிம் 223

11) வீட்டில் தனித்திருத்தல்
நபிகளாரின் அறிவுரையாகும்

தொற்று நோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் தன் வீட்டிலேயே பொறுமையுடனும் கூலியை எதிர்பார்த்தும், அல்லாஹ் தனக்கு விதித்துள்ளதைத் தவிர வேறு எந்த ஒன்றும் தன்னை அணுகாது என்றும் காத்திருந்தால், ஒரு உயிர்தியாகியின்(ஷஹீத்) கூலியை அவர் அடைந்து கொள்வார்.
முஸ்னத் அஹமத், ஸஹீஹ், புகாரி 2829,



## “ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு ஒற்றுமை நீங்கின் அனைவருக்கும் தாழ்வு”

நடந்து மூடிந்துள்ள முப்பதாண்டு யுத்தமும் அதனைத் தொடர்ந்து மேலெழுந்து வரும் அரசியலும்
நாட்டிலுள்ள மூவின மக்களுக்கும் ஒரு பெரிய பாடப்புத்தகமாக உள்ளது.
இவ்வளவு பெரிய துன்பங்களைக் கண்ட பின்னரும் கூட, தமிழ் மக்கள் தங்களுடைய மன
நிலையின் வெளிப்பாட்டை தேர்தல்கள் மூலம் தேசத்துக்கும் சர்வதேசத்துக்கும் வெளிப்படுத்தி
யுள்ளார்கள்.
அதேபோன்று யுத்தத்துக்குப் பிறகு முஸ்லிம் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற சில புது அனு பவங்கள் அவர்கள் மத்தியிலும் புதிய சிந்தனை
யைத் தூண்டியுள்ளது.
இருந்த போதும், முஸ்லிம்களின் சிதறிய இருப்பு தொடர்பாக அதாவது அவர்கள் ஒன்று கூடி இருக்காமையினால் அரசியல் ரீதியான அழுத்தத்தை ஒரு அளவுக்கு மேல் கொண்டு செல்ல முடியாத நிலைமை காணப்படுகிறது.
முஸ்லிம் மக்கள் தமிழ் மக்களுடன் இணையா மல் தங்கள் உரிமைக்கான அழுத்தத்தை ஒரு மட்
டத்திற்கு மேல் எடுத்துச் செல்லக் கூடிய வாய்ப்பு
மிகவும் குறைவானதே.
அதேபோன்றே தமிழ் மக்களும் முஸ்லிம் மக் களுடன் இணையாமல் வட - கிழக்கு மாகாணத்
தின் ஏக குரலாக தேசிய மட்டத்திலும் சர்வதேச
மட்டத்திலும் ஒலிக்கிற வாய்ப்பும் குறைவே,
ஆகவே, மூஸ்லிம் மக்களுடன் இணைவதன் மூலம்தான் தமிழ் மக்கள் வட - கிழக்கு மாகா ணத்தினுடைய முழுமையான பிரதிநிதித்துவத்
தலைமையை உருவாக்க முடியும்,

அதேபோன்று தமிழ் மக்களுடன் இணைவ தன் மூலம் தான் முஸ்லிம் மக்களும் தங்களு டைய கோரிக்கைகளை, அழுத்தங்களை ஒரு மட்டத்திற்கு மேல் அரசியல் ரீதியாக உருவாக்க
முடியும்.
ஆகவே, இவற்றை இரு தரப்பினரும் அதாவது மக்கள் ஆணையைப் பெற்ற சம்பந்தன் தலைமை
யிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்
லிம். காங்கிரஸினரும் மற்றும் ஏனைய தமிழ், முஸ்லிம் அமைப்புகளும் உணர்ந்து செயற்பட வேண்டும்.
ரவூப் ஹக்கீம் அண்மையில் தெரிவித்த சில கருத்துக்
கள் நம்பிக்கை தரக் கூடிய கருத்துக்களாக இருந்தன.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின்
அளவுக்கு-கடந்த காலங்களில் தமிழ், முஸ்லிம் மக்கள்
வாழ்ந்த வரலாறு, இடையில்
அவர்களுக்கிடையில் ஏற்
பட்ட பிரச்சினைகளையும் அப்
ரச்சினைகளுக்கான,
தீர்வு தொடர்பிலும், வட - கிழக்கு மாகாணங்களின்
நிலைமைகளை உணர்ந்த, ஒரு தலைவர் இல்லை என்று
தான் கூற வேண்டும். ஆகவே, இவ்வாறான அனுபவத்
தைக் கொண்ட தலைவர் ஒருவர் தமிழர்களின் மத்தியில்
இருக்கும் இந்தச் சூழல் ஒரு சிறந்த சூழல் என்றே நான்
கருதுகிறேன்,
"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு ஒற்றுமை நீங்கின் அனைவருக்கும் தாழ்வு' என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

**–கவிஞ்ரும் நடிகரும் அரசியல் செயற்பாட்டாளருமான வ.ஐ.ச.ஜெயபாலன்.**

## பண்டாரவெளியில் முசலிவாசகர் வட்டட்ம்



பண்டாரவெளியில் முசலிவாசகர் வட்டட்ம் மற்றும் பள்ளி நம்பிக்கையாளர் சபையினருடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்புதலின் அடிப்படையில் 11.00 மணியளவில் சமாதான வாசிகசாலை திறந்து வைக்கப்பட்டட்து. இவ்செயற் திட்டட்த்திற்கு சர்வோர்தய சாந்தி சேனா இளைஞர் அமைப்பின் குழுவினரும் தங்களின் பங்களிப்பினை நல்கி இருந்தனர்ர் இந்நிகழ்வில் சர்வோதய மாவட்டட் பிரதிநிதிகளுடன் முன்னால் மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.எஸ்.செபஸ்தியான், முசலிவாசகர் வட்டட்த்தின் செயலாளர், பள்ளி நம்பிக்கையாளர் சபை தலைவர், சமயத் தலைவர்கர் (மௌலவி), ஊர் மக்கள் மற்றும் நலன் விரும்பிகள் கலந்து சிறப்பித்தமை நிகழ்வின் அதிசிறப்பு விடயமாகும். இந்நிகழ்வினை ஒழுங்கமைத்துத் தொகுத்து வழி நடத்தியவர் அஷ்ஷெய்க் பௌஸ் பமீஸ் அவர்கர்ளாகும். நிகழ்வு 12.30 மணிக்கு இனிதே நிறைவுற்றது.
செயலாளர், முசலி வாசகர் வட்டட்ம்



# ஒன்றுபடுவோம்...!

முதல் மனிதன் கால் பதித்த
புண்ணிய பூமி இது.
உலகின் கண்கள் வியர்ந்து பார்த்த
வித்துவ தீபமிது.
இந்து சமுத்திரத்தில் மிதந்திருக்கும்
அழகிய முத்து இது.
ஆசிய மண்ணில் அழகாய் மின்னும்
அபூர்வ நட்சத்திரம் இது.
இரத்தம் சிந்தாமல் சுதந்திரம் பெற்ற
இரத்தன தீபமிது.
பொக்கிஷங்கள் புதைந்திருக்கும்
பெறுமதி மிக்க
இந்த மண்ணில்....
இயற்கை அழகும் வளங்களும்
கொழித்து விளைந்த
இந்த மண்ணில்....
இரத்தினக் கற்கள் விதைந்திருக்கும்
விலைமதிப்பு மிக்க
இந்த மண்ணில்....
சிறப்பு மிக்க மனிதர்களெல்லாம்
வாழ்ந்து மறைந்த
இந்த மண்ணில்....
இரத்தக் கறைகள் படிந்து
அழுக்காகிப் போனதே...!
இனியும் வேண்டாம் இன வெறி,
இனியும் வேண்டாம் வேற்றுமை,
நாம் பெற்ற சுதந்திரத்தை
நாமே தொலைத்தோம்.
நாம் பெற்ற நிம்மதியை
நாமே தொலைத்தோம்.
நாடு போற்றும் தலைவர்கள் பலரையும்
நாமே தொலைத்தோம்.
உணர்வற்ற மனிதர்களால்
உறவுகளையும் இழந்தோம்.
இனியும் வேண்டாம் இன வெறி,
இனியும் வேண்டாம் வேற்றுமை.
இந்த அழகான தேசத்தை நேசிக்கும்
இலங்கையராய் நாம் வாழ்வோம்.

'மதம்' பிடிக்காமல் மனிதம் மீறாமல்
மனித உரிமைகளை நாம்
மதிப்போம்.
அவரவர் மதங்களை இடையூறின்றி
அனுஷ்டித்து தினம் நாம்
மகிழ்வோம்.
அழுக்குகள் படிந்த அரசியலையும்
அடியோடு நாம் துடைத்தெறிவோம்.
அடக்கியாளும் ஆட்சியாளர்களின்
அடிமைகளாய் நாம் ஆகாதிருப்போம்.
கருத்துப் பேதங்களுடன்
கசப்பான எண்ணங்களையும்
கண்ணியமாய்
நாம் களைத் தெறிவோம்.
சிறுபான்மை என்றும்
பெரும்பான்மை என்றும்.
வேற்றுமை பேசாமல்
நாம் வாழப் பழகுவோம்.
இனங்களால் வேறுபட்டாலும்
குணங்களால் நாம் ஒன்றுபடுவோம்.
மதங்களால் வேறுபட்டாலும்
மனங்களால் நாம் ஒன்றுபடுவோம்.
ஆசியாவின் அற்புத தேசத்தை
உருவாக்க நாம் புறப்படுவோம்.
உலக அதிசய தேசத்தை
கட்டியெழுப்ப நாம் ஒன்றுபடுவோம்.
மனிதம் நிறைந்த மனிதர்கள் வாழும்
அழகான தேசமாய்
எம் தாய் மண்ணை
நாம் மீட்டெடுப்போம்.

கல்ஹின்னை
பஹ்மி ஹலீம்தீன்.

## 30/1 தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் கடப்பாட்டிலிருந்து இலங்கை விலகியமை வரவேற்கத்தக்கதொரு நகர்வல்ல

### ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையாளர்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 30/1 தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் கடப்பாட்டிலிருந்து இலங்கை அரசாங்கம் கடந்த 2020 பெப்ரவரி மாதம் விலகியமையானது நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதை நோக்கிய செயன்முறையில் வரவேற்கத்தக்கதொரு நகர்வல்ல என்று மதம் மற்றும் மதரீதியான நம்பிக்கைகளுக்கான சுதந்திரம் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையாளர் கலாநிதி அஹ்மட் ஷஹீட் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதுமாத்திரமன்றி சிவில் சமூக செயற்பாடுகளுக்கான இடைவெளி மட்டுப்படுத்தப்பட்டுள்ளமை மற்றும் சிவில் சமூக, மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், கடந்தகால மீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள், தமது உரிமைகளுக்காகப் போராடும் சிறுபான்மையின சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தொடர்ச்சியான கண்காணிப்பிற்கு உட்படுத்தப்படுகின்றமை மிகுந்த கரிசனையைத் தோற்றுவித்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஷ்ரீன் அப்துல் சரூர் என்பரால் எழுதப்பட்ட 'போருக்குப் பின்னரான இலங்கையில் முஸ்லிம்கள் :அடக்குமுறை, எதிர்ப்பு, மறுசீரமைப்பு' என்ற நிகழ்நிலையிலான புத்தக வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது: இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் சர்வதேச சமூகத்தை விழிப்புணர்வுடன் வைத்திருக்கும் விதமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களினால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவரும் முயற்சிகள் பாராட்டுக்குரியவையாகும்.

இலங்கையில் தற்போதைய சூழ்நிலையில் சட்டத்தின் ஆட்சி மற்றும் கட்டமைப்புக்களின் சுயாதீனத்தன்மை உள்ளடங்கலாகக் குறித்த சில விடயங்களில் ஏற்பட்டிருக்கும் பின்னடைவு, மனித உரிமைகளை அனுபவிப்பதில் காணப்படும் மட்டுப்பாடுகள், குறித்த சில இனங்களுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் வெறுப்புணர்வுப்பேச்சுக்கள் மற்றும் நிலைமாறுகால நீதிச்செயன்முறையில் வரையறுக்கப்பட்டளவிலான முன்னேற்றங்கள் ஆகியவை அவதானிக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் போர் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னரான காலப்பகுதியில் நல்லிணக்கம் மற்றும் நிலைமாறுகால நீதிச்செயன்முறையை வலுப்படுத்தல் ஆகிய விடயங்களில் சர்வதேச சமூகம் இலங்கைக்கு அவசியமான ஒத்துழைப்புக்களை வழங்கிவந்தது.

இருப்பினும் கடந்த காலங்களில் இலங்கை அரசாங்கத்தினால் நிறுவப்பட்ட ஆணைக்குழுக்கள் உண்மையைக் கண்டறிதல் மற்றும் பொறுப்புக்கூறலுக்கான நம்பத்தகுந்த பொறிமுறையை நிறுவுவதில் தோல்வியடைந்திருப்பது மாத்திரமன்றி, குறிப்பிடத்தக்களவான மனித உரிமைசார் வழக்குகளின் விசாரணைகள் மற்றும் நீதிமன்றச்செயன்முறைகளிலும் தடையேற்படுத்தியிருக்கின்றன என்று ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரினால் கடந்த பெப்ரவரி மாதம் வெளியிடப்பட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டளவிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும், காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் மற்றும் இழப்பீட்டுக்கான அலுவலகம் ஆகியவற்றின் இயங்குகை தொடர்பில் இன்னமும் பல்வேறு கேள்விகள் காணப்படுகின்றன. பலவருடகாலமாக நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கும் ஒருமைப்பாட்டிற்கும் அச்சுறுத்தல் என்றவாறாக ஊடகங்களினால் காண்பிக்கப்பட்டுவந்திருக்கும் முஸ்லிம் சமூகத்தையும் அவர்களின் வழிபாட்டுத்தலங்களையும் இலக்குவைத்து இடம்பெற்ற இனக்கலவரத்தைத் தொடர்ந்து கடந்த 2019 ஆம் ஆண்டில் உயிர்த்த ஞாயிறுதினப் பயங்கரவாத்தாக்குதல்கள் இடம்பெற்றன.

நான் இலங்கையில் மதரீதியான சிறுபான்மையினரின் மனித உரிமைகள் நிலை குறித்து தொடர்ச்சியாகக் கண்காணித்து, அறிக்கையிட்டிருக்கின்றேன். அதுமாத்திரமன்றி சிறுபான்மையின சமூகத்திற்கு எதிரான வன்முறைகள் மற்றும் வெறுப்புணர்வை முடிவிற்குக்கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறும் அரசாங்கத்தைத் தொடர்ச்சியாக வலியுறுத்தியிருக்கின்றேன்.

கடந்தகால மற்றும் தற்போதைய மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை நிலைநாட்டுதல், வெறுப்புணர்வைத் தூண்டும் கட்டமைப்புக்களை வலுவிழக்கச்செய்தல், அனைவருக்கும் சமத்துவமான முறையில் நீதிநிலைநாட்டப்படுவதை உறுதிசெய்தல், பயங்கரவாதத்தடைச்சட்டத்தை இல்லாதொழித்தல் மற்றும் மதரீதியான குற்றச்செயல்களுடன் தொடர்புடைய தண்டனைச்சட்டக்கோவையின் சரத்துக்களை மீளாய்விற்கு உட்படுத்தல் ஆகிய விடயங்கள் தொடர்பில் அரசாங்கம் உரியவாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று நான் பரிந்துரை செய்திருந்தேன்.


அத்தோடு இனங்களுக்கு இடையிலான நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதில் அரசியல் மற்றும் மதத்தலைவர்களுக்குரிய பொறுப்பை வலுப்படுத்துவதற்கும் சமூகங்களுக்கு இடையிலான புரிந்துணர்வைக் கட்டியெழுப்புவதற்கும் அவசியமான நடவடிக்கைகளை எடுக்குமாறும் வலியுறுத்தியிருந்தேன்.

இவ்வாறானதொரு பின்னணியில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 30/1 தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் கடப்பாட்டிலிருந்து கடந்த 2020 பெப்ரவரி மாதம் இலங்கை அரசாங்கம் விலகியுள்ளமையானது நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதை நோக்கிய செயன்முறையில் வரவேற்கத்தக்கதொரு நகர்வல்ல.

அதேபோன்று சிவில் சமூக செயற்பாடுகளுக்கான இடைவெளி மட்டுப்படுத்தப்பட்டுள்ளமை மற்றும் சிவில் சமூக மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், கடந்தகால மீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள், தமது உரிமைகளுக்காகப் போராடும் சிறுபான்மையின சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்படுகின்றமை என்பன மிகுந்த கரிசனைக்குரிய விடயங்களாகும்.

கொவிட் - 19 வைரஸ் பரவல் மனித உரிமைகள் நிலைவரம் மேலும் மோசமடைவதற்கு வழிவகுத்தது. குறிப்பாக விஞ்ஞானரீதியான நிரூபிக்கப்படாத நிலையிலும்கூட, முஸ்லிம் சமூகத்தின் மதரீதியான நம்பிக்கைக்கு முரணானவகையில் கொவிட் - 19 வைரஸ் தொற்றினால் உயிரிழப்போரின் சடலங்களைத் தகனம் செய்வதைக் கட்டாயமாக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மேலும் அரசாங்கத்தின் கொள்கைகளை விமர்சிப்பதையும் மாற்றுக்கருத்துக்களை வெளியிடுவதையும் குற்றமாக்குவதற்கும் அத்தகைய நபர்கள்மீது அடக்குமுறைகளைப் பிரயோகிப்பதற்கும் பயங்கரவாதத்தடைச்சட்டம் அடிக்கடி பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.




# காலம் மாறியது..!



காலம் மாறியது..!
ஒவ்வொரு வருடத்தின்
ஒக்டோபர் இறுதிதினம்
நெருங்கி வரும் நாட்களிலே
நெஞ்செல்லாம் வலியெடுக்கும்
நினைவெல்லாம் தடுமாறி
நீர் நிறையும் கண்களிலே
உணர்வெல்லாம் தத்தளித்து
உதிரம் அலையெழுப்பும்
தாயகத்தின் நினைவெழுந்து
தவிதவித்து மனம் கதறும்
வேகாத உடலோடு
வெந்த உயிர் தொங்கி நின்று
பிறந்த தாய் மண்ணினைவில்
பிரிவில் துடிதுடிக்கும்
"இன்னுயிர்த் தாய் ஈன்றெடுத்த
இரட்டைக் குழந்தைகள் போல்
நூறு பலஆண்டுகளாய்
நோகாதும் நொடியாதும்
ஒருயிராய், ஈருடலாய்
ஒன்றிணைந்து வாழ்ந்த அந்தக்
காலத்தின் நினைவெழுந்து
கண்கள் குளமாகிவிடும்
ஓர் புலத்தில் தான் வாழ்ந்து
ஓர் மொழியைத் தான் பேசி
வாழ்ந்த அந்தக்காலத்தின்
வசந்த உறவுகளில்
காலக் கொடுங் கிழவன்
கண்பட்டுப் போனது போல்
ஒக்டோபர் தொண்ணூறு
உருக்குலைக்க வந்ததுவோ?
எண்ணி முப்பத்தி
ஓராண்டு போனபின்னும்
இன்றைக்கு என்றாற்போல்
இதயம் துடிக்கிறது
என்ன நடந்ததென்று
யாருக்கும் தெரியவில்லை
ஏனிந்தப் படையெடுப்பு
என்றெவருக்கும் புரியவில்லை
யாரும் கனவினிலும்
இதையெண்ணிப் பார்த்ததில்லை
எல்லாம் ஓரீர் நாளில்
இரண்டாகப் போயிற்று
வீட்டோடு வாசல்
வியாபாரச் சாலைகள்
தோட்டம் துரவு
தொழும் பள்ளி காணி வயல்
கை கழுத்து தங்க நகை
காசு பணம் உடுபிடவை
அத்தனையையும் பறித்து
ஆளை மட்டும் வீதியிலே
வேட்டு முழக்கத்தில்
விரட்டியடித்த வலி
ஒக்டோபர் இறுதியினை
உயிராக்கி வைக்கிறது
கண் அழுது வாய் குளறி
காட்டு மேடு பள்ளத்தில்
அரசியல் அகதிகளாய்
யாருமிலா அநாதைகளாய்
உண்பதற்கு ஏதுமின்றி
உடுக்க மாற்றுடையுமின்றி
வடக்கின் அடியிருந்து
வடமேற்கு முடிவரைக்கும்
விழுந்து எழுந்து
விறகாகிக் காய்ந்தும் போய்
உயிரைக் கையில் பிடித்து
ஓடியது கொஞ்சமல்ல
தாய் நாடு பேய் வீடாய்
தமிழகமோ சுடுகாடாய்
தமிழினத்திற்குரியரல்ல
தமிழ் தேசியமும் கிடையா
என்று வடபுலத்தின்
எண்பதாயிரம் முஸ்லிம்களும்
வந்தேறு குடிகள் என்றும்
விரட்டி அடித்ததுவும்
வீறாப்புப் பேசியதும்
ஒக்டோபர் தொண்ணூறின்
ஓரங்க நாடகமாம்
நூறுகிலோ மீற்றருக்கும்
நீளமான தூரத்தை
நொண்டி நடந்த வலி
நோவின்னும் மாறவில்லை
பாதை முழுவதிலும்
படைத்தவனின் பெயர் சொல்லி
அழுது மன்றாடியதை
யாரும் மறக்கவில்லை
இன்றைக்கில்லாவிடினும்
என்றைக்கோ ஓர் வழியை
காட்டும்படி இரந்து
கதறியதை மறக்கவில்லை
எல்லாச் சுமைகளையும்
இறைவன் மேலே சுமத்தி
ஏந்தல் நபி அவர்கள்
இரங்கலுக்காய் நோன்பிருந்து
வடபுலத்து முஸ்லிம்கள்
வாழ்வில் ஒளி வீச
அல்லாஹ்வின் பாதையிலே
அடியெடுத்துச் செல்கின்றோம்..!

**சுஐப் எம். காசிம்-**






Please Join our group - "Join For Unity' on FB and support us click to join

**கடவுள் உங்களுக்கு உதவி செய்ய வேண்டும் என நீங்கள் விரும்பினால்,**

நீங்கள் மற்றவர்களுக்கு உதவி செய்யுங்கள்!
நினைவில் கொள்ளுங்கள்...
அவன் யாவற்றுக்கும் உரிமையாளன். உங்களிடம் என்ன இருந்தாலும், அது அவன் தந்தவை...
அவனால் எவ்வளவு தரமுடியுமோ அதேபோல் கண் இமைக்கும் நேரத்தில், அவனால் அவற்றை திருப்பி எடுத்துக் கொள்ளவும் முடியும்...
எனவே, மக்களை எப்படி நடத்துகிறீர்கள் என்பதில் கவனமாக இருங்கள்!
நீங்கள் செய்யும் அனைத்தையும் அவன் அறிந்தவனாக இருக்கின்றான்.

**- முப்தி மென்க்**

நிதானத்துடன் நடப்பதால்
உனது வாழ்வாதாரம்
குறைந்து விடுவதில்லை

கடின உழைப்பு
உனது வாழ்வாதாரத்தை
கூட்டிவிடுவதுமில்லை

இன்பமும்
நிலைப்பதில்லை
துன்பமும் நிலைப்பதில்லை

செழிப்பும் உனக்கு
நிலைப்பதில்லை,
துயர நிலையும் நிலைப்பதில்லை...

போதுமென்ற மனம்
கொண்டவனாக
நீ இருந்தால்...

நீயும் உலகை ஆளும்
அரசனும் சரிசமமானவர்கள்தான்..

**- இமாம் ஷாபிஈ (ரஹ்)**